# மெட்ரோ ரயில் தடத்தில் 2-வது நாளாக பாதுகாப்பு ஆணையர்கள் குழு ஆய்வு

■ சென்னை

சென்னையில் வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே முதல்கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டப்பணிகள் ரூ.3,700 கோடியில் நடைபெற்றன. இந்த புதிய தடத்தில் ரயில்கள் இயக்கம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய்குமார் ராய் மற்றும் 3 பாதுகாப்பு துணை ஆணையர்கள் விம்கோ நகரில் இருந்து சுங்கச்சாவடி மெட்ரோ வரையில் நேற்று 2-வது நாளாக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

மெட்ரோ ரயில் நிலையத்தின் உட்புறத் தோற்றம், பல்வேறு கட்டுமான பணிகள், இயக்க முறைகள், நடைபாதைத் தீயணைப்பு செயல்பாடு, காற்றோட்ட வசதி, நீர் உறிஞ்சு ஏற்பாடுகள், பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், ரயில் தண்டவாளத்தின் அமைப்பு மற்றும் சிக்னல் அமைப்பு உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின்போது, மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் குழுவுடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குர் பிரதீப் யாதவ், இயக்குநர்கள் ராஜீவ் நாராயண் திவேதி, ராஜேஷ் சதுர்வேதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.